DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**O.S.No. 34 of 2023**

| | | |
|---|---|---|
| Deposition of P.W. 3 | } Prosection<br>} Defence<br>} | |

Name of the Witness : திரு.சி.தனராஜ்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 12.06.2025

**முதல் விசாரணை**

நான் கோபாலபுரம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சக்கரை ஆலையில் தொழிலாளர் நல அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் கேட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். எங்கள் ஆலையில் பணியாற்றிய இறந்து போன ஆர்.காந்தியின் பணி பதிவேடு, நாமிநேசன படிவம், அவருடைய இறப்பிற்காக வழங்கப்படவேண்டிய தொகைகள மற்றும சலுகைகள குறித்த விவரங்கள எடுத்து வந்துள்ளேன். காந்தியின இறப்பின போது ஈமசடங்கிற்காக எங்கள் நிறுவனத்தின மூலம வழங்கப்பட்ட ரூபாய் 5000க்கான ரசீதை எடுத்து வந்துள்ளேன். அசலையும், சான்றிட்ட நகலையும் எடுத்து வந்துள்ளேன். காந்தி அவருடைய பணிவேட்டில் நாமினியாக முதலில அவரது அம்மா மல்லிகாவையும், பின்னர் ஜி.சுமதியை *10.06.2017*ல் கொடுத்துள்ளார். அவரின் இறப்பின் போது கொடுக்கப்பட்ட ரூபாய் **5** ஆயிரத்தை சுமதியிடம் கொடுக்கப்பட்டது.

*2)* முதலில் காந்தியின் இறப்பு சம்பந்தப்பட்ட பணபயன்களை கொடுப்பதற்காக சுமதி என்பவருக்கு தான் கடிதங்களை அனுப்பினோம். பின்பு சாரதா என்பவரும காந்தியின மனைவி என்று சொன்னதால இருவரும யாா ஆவணங்களை கொடுக்கிறார்களா அவர்களுக்கு பணிபயன்களை கொடுப்பதாக சொல்லியுள்ளேன்.

*3)* பணி பதிவேடு **EX.X1** ஆகவும், நாமிநேசன் படிவம **EX.X2** ஆகவும், அவருடைய இறப்பிற்காக வழங்கப்படவேண்டிய தொகைகள் மற்றும் சலுகைகள் குறித்த விவரங்கள் **EX.X3** ஆகவும் இறப்பின் போது

ரூபாய் **5** ஆயிரம் வழங்கப்பட்ட ரசீது **EX.X4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

காந்தி பணிபுரியும் போது நான் ஆலையில் பணிபுரிந்து வந்தேன். எனக்கு காந்தியை தெரியும். என்னிடம் காட்டப்படும் அடையாள அட்டையில் இருப்பது காந்தி தான். அதை எங்கள் ஆலையால் தான் வழங்கப்பட்டது. அது ***பி.சா.ஆ.1*** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பணிபதிவேட்டில் அவருடைய புகைபடம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளது காந்தியா என்று தெரியவில்லை. காந்தியின் இறப்பு தேதி *25.03.2018*. என்னிடம் காட்டப்படும் பணிபதிவேட்டில் உள்ளது காந்தியின் கையெழுத்து தான். காந்தியின் பணி பதிவேட்டில் உள்ள கையெழுத்தும், காந்தியின் நாமிநேசனில் உள்ள கையெழுத்தும் மாறுபட்டுள்ளது என்றால் சரிதான். எஸ்ஆர் பதிவேட்டில் காந்தி *31.12.2016*க்கு பிறகு மருத்துவ விடுப்பு எடுத்துள்ளாரா என்பதற்காக குறிப்பு இல்லை. காந்தி உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டாரா என்றால் அப்போது நான் வேறு ஆலையில் பணிபுரிந்ததால் அதை பற்றி எனக்கு தெரியாது. நாமிநேசன் படிவம் காந்தியால் தான் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. காந்தி உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது தயார் செய்யப்பட்டது தான் நாமிநேசன் படிவம் என்றால் சரியல்ல. ஒரு நபர் வேலைக்கு சேர்ந்த

உடனே நாமிநேசன் படிவம் கொடுக்கவேண்டும். திருமணம் ஆனவுடன் நாமிநேசன் பாரம் எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

2) காந்தி இறக்கும் போது பம்புமேனாக பணிபுரிந்தார். நாமிநேசன் படிவத்தில் குறிப்பிட்டுள்ள சுமதியின் போட்டோ இல்லை. சுமதி அவர் காந்தியின் மனைவி என்பதற்கு ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை. சாரதா எங்கள் ஆலையில் தான் பணிபுரிந்தார் என்றால் எனக்கு தெரியாது. நாமிநேசன் படிவத்தில் கையெழுத்து போட்டுள்ள சாட்சிகளின் விலாசம் குறிப்பிடபடவில்லை. நாமிநேசன் படிவம் ஜோடிக்கப்பட்டது என்பதால் தான் அதில் தேவைப்பட்ட விவரங்கள் இல்லை என்றும் அது பொய்யானது என்றால் சரியல்ல. காந்தியின் சாரதா என்று தெரிந்து கொண்டு சுமதிக்கு ரூபாய் 5 ஆயிரம் பணம் கொடுத்தது தவறு என்றால் சரியல்ல.